**தலைப்பு – 332 தேசிய சமுதாய நீர் வழங்கல் திணைக்களம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தேசிய சமுதாய நீர் வழங்கல் திணைக்களத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2019 திசெம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் தேசிய சமுதாய நீர் வழங்கல் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளையும் அவதானிப்புக்களையும் உள்ளடக்கிய பொழிப்பறிக்கை 2020 யூன் 29 ஆம் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் தேசிய சமுதாய நீர் வழங்கல் திணைக்களத்தின. விரிவான வருடாந்த முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2020 யூலை 29 ஆம் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, 2019 திசெம்பர் 03 ஆந் திகதிய 271∴2019 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட ஒண்றிணைந்த நிதிக்கூற்றுக்கள் மற்றும் தேசிய சமுதாய நீர் வழங்கல் திணைக்களத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களிற்கிணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இந் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களிற்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்கவும் உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் அதனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணுதல் வேண்டும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38(1)(ஈ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியதுடன் அம்முறைமையின் செயன்முன்னேற்றம் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக பேணுவதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்கக்கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போதும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி அமைச்சின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரிற்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டரீதியான மற்றும் பிரமாண தேவைப்பாடுகள் மீதான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(ஈ) பிரிவு பின்வரும் தேவைப்பாடுகளிற்கான குறித்துரைக்கப்பட்ட ஏற்பாடுகளை உள்ளடக்குகின்றது.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருந்திருத்தல்

(ஆ) முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் என்னால் செய்யப்பட்ட பரிந்துரைகள் அமுலாக்கப்பட்டிருந்தது.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 நிதிச் செயலாற்றல் கூற்று

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு விடயம் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | பொதுத் திறைசேரியிடமிருந்து ரூபா 580,342,440 ஆன கட்டுநிதி பெறப்பட்டிருந்த போதிலும் ரூபா 163,440 ஆன குறைவுடன் நிதிச் செயலாற்றல் கூற்றில் ரூபா 580,179,000 ஆக காட்டப்பட்டிருந்தது. | 2019 திசெம்பர் 03 ஆந் திகதிய 271/2019 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டும். | வெளிநாட்டு மானியங்கள் நிதி வளம் இல. 13 இன் கீழ் ரூபா 163,440.00 ஆன தொகை பெறப்பட்டிருந்ததுடன் முழுத் தொகையும் செலவழிக்கப்படடிருந்தது. |
| (ஆ) | திறைசேரியின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் முற்பணப் பெறுவனவுகள் ரூபா 5,976,146 ஆக இருந்தன. எவ்வாறாயினும், இது ரூபா 173,239 ஆன குறைவுடன் நிதிச் செயலாற்றல் கூற்றில் ரூபா 5,802,907 ஆக காட்டப்பட்டிருந்தது. அதேபோல் முற்பணக் கொடுப்பனவுகள் ரூபா 173,239 ஆன வித்தியாசத்துடன் முற்பணக் கொடுப்பனவு ரூபா 7,580,893 ஆக காட்டப்பட்டிருந்தது. | 2019 திசெம்பர் 03 ஆந் திகதிய 271/2019 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டும். | முற்பணம் பீ கணக்கு இணக்கக் கூற்றில் இல. 2 இன் கீழ் மொத்த கொடுப்பனவுகள் ரூபா 7,754,132.00 ஆக உள்ளதுடன் சரியான கொடுப்பனவு நி.பி 503(1) இன் பிரகாரம் இல. 3 இன் கீழ் இதற்கு ரூபா 173,240 சீராக்கல்களை அகற்றிய பின்னர் ரூபா 7,580,892 ஆக இருந்தது. மேலும், கணக்குகளின் பிரகாரம், பெறுவனவுகளாக காட்டப்பட்டிருந்த ரூபா 5,976,146.00 இற்கு ரூபா 173,240 சீராக்கிய பின்னர் ரூபா 5,802,906.00 சரியான |

| | | | |
|---|---|---|---|
| | | | பெறுவனவுகள் இருந்தன. கணக்கீட்டு முறைமையின் பிரகாரம் திருத்தம் செய்யப்படும் போது தவறு சீராக்க வேண்டியுள்ளது. |
| (இ) | திணைக்களம் 332-1-1-2-2506 மீளாய்வாண்டின் போது செலவினத் தலைப்பின் கீழ் ரூபா 163,440 ஆன செலவினம் ஏற்பட்டது. எவ்வாறாயினும், நிதிச் செயலாற்றல் கூற்றில் ஏனைய மூலதனச் செலவினத்தின் கீழ் காட்டப்பட்டிருந்தது. இதன் விளைவால், மொத்த மூலதனச் செலவினம் ரூபா 163,440 ஆன வித்தியாசத்துடன் ரூபா.435,600,801 ஆக காட்டப்பட்டிருந்தது. | 2019 திசெம்பர் 03 ஆந் திகதிய 271/2019 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டும். | வெளிநாட்டு மானியத்தின் கீழ் பெறப்பட்ட இந்த தொகை மூலதனச் செலவினமாக சேர்க்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | பொதுத் திறைசேரியின் நிதிக்கூற்றுக்கள் காட்டப்பட்ட மீதிகளின் படி முற்பண பெறுவனவகள் மற்றும் கொடுப்பனவுகள் மற்றும் திணைக்களத்தின் புத்தகங்களின் படியான மீத தொடர்பில் முறையே ரூபா 263,795 மற்றும் ரூபா 161,990 ஆன வித்தியாசம் இருந்த பேதிலும், கட்டுநிதி சீராக்கல் கணக்கில் பதியப்பட்டிருக்கவில்லை.“ | 2019 திசெம்பர் 03 ஆந் திகதிய 271/2019 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் பிரகாரம் சரியான கட்டுநிதி சீராக்கல் கணக்கு தயாரிக்கப்பட வேண்டும். | என்னால் சமர்ப்பிக்கப்பட்ட முற்பணப் பெறுவனவகள் மற்றும் முற்பணம் பீ கணக்கிணக்கக் கூற்று உள்ளடங்கலான திறைசேரி நிதிக்கூற்றுக்களிற்கான மீதிக்கும் இடையில் எவ்விதமான வித்தியாசமும் இல்லை. அதே இறுதி மீதியாக இருக்க வேண்டியதுடன் இன்னொரு அரசாங்க நிறுவனத்தால் செய்யப்பட்ட ரூபா 173,240 ஆன தொகைக்கு வரவு மற்றும் செலவு தவறுகள் சரிசெய்யப்பட்டன. |
| (உ) | 253-1-2-4-1502-11 ஆம் இலக்க செலவினத் தலைப்பின் கீழ் திணைக்களத்தால் ரூபா 187,386 ஆன தொகை ஏற்பட்டிருநதது. எவ்வாறாயினும், இது ரூபா 67,202 ஆன வித்தியாசத்துடன் கட்டுநிதிக் கணக்கில் ரூபா 120,184 ஆக பதியப்பட்டிருந்தது. | 2019 திசெம்பர் 03 ஆந் திகதிய 271/2019 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் 7.6 ஆம் பிரிவின் பிரகாரம் திருத்திய கட்டுநிதி சீராக்கல் கணக்கு தயாரிக்கப்பட வேண்டும். | உடன்படுகின்றோம் |

| | | |
|---|---|---|
| (ஊ) திணைக்களத்தின் பரீட்சை மீதியின் பிரகாரம், 332-1-1-0-1003-11 ஆம் செலவினத் தலைப்பின் கீழ் செலவினம் ரூபா 29,410,342 ஆக இருந்தது. எவ்வாறாயினும், திறசேரியின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் ரூபா 29,455,362 ஆக இருந்தது. எனவே, ரூபா 45,020 ஆன வித்தியாசம் அவதானிக்கப்பட்டது. எவ்வாறாயினும், வித்தியாசம் கட்டுநிதி சீராக்கல் கணக்கில் சீராக்கப்பட்டிருக்கவில்லை. | 2019 திசெம்பர் 03 ஆந் திகதிய 271/2019 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் 7.6 ஆம் பிரிவின் பிரகாரம் திருத்திய கட்டுநிதி சீராக்கல் கணக்கு தயாரிக்கப்பட வேண்டும். | திணைக்களத்தின் பரீட்சை மீதியின் பிரகாரம், 332-1-1-0-1003-11 ஆம் செலவினத் தலைப்பின் கீழ் செலவினம் ரூபா 29,410,342 ஆன மீதி சரியானது எவ்வாறாயினும், இலங்கை புகையிரத திணைக்களத்தால் திணைக்கள உத்தியோகத்தர்களிற்கு வழங்கப்பட்ட ரூபா 45,020 புகையிரத ஆணைச்சீட்டு கட்டணம் உள்ளடங்கலாக திறைசேரி அச்சின் பரீட்சை மீதியில் ரூபா 29,455,362 காட்டப்பட்டிருந்தது. |

### 1.6.2 நிதி நிலைமைக் கூற்று

| கணக்காய்வு விடயம் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| i. நிதிநிலைமைக் கூற்று மற்றும் ACA 6 படிவம் என்பவற்றின் பிரகாம் நிதிநிலைமை கூற்று பவடி கூற்றின் பிரகாரம், 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் உள்ளடங்கிய வாகனங்கள் மற்றும் உபகரணங்களின் பெறுமதி ரூபா 37,967,000 ஆக இருந்தது. கணக்காய்விற்கு கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம், திணைக்களத்திற்கு உடமையான 17 மோட்டார் வாகனங்களின் பெறுமதி ரூபா 37,300,000 ஆக இருந்தது. மேலும், ரூபா 36,800,000 தொகையான வாகனங்கள் மற்றும் உபகரணங்கள் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப் பட்டிருக்கவில்லை. கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம், 2016 ஆம் ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட திணைக்களத்தின் கீழ் பதியப்பட்ட ரூபா 36,800,000 கிரயத்திலான மோட்டார் வாகனங்களின் இருப்பு நிலையான சொத்துப் பதிவேட்டிலோ அல்லது அதன் கணக்கிற்கோ | நிதிக்கூற்றுக்களிற்கு எடுக்கப்பட்டிருக்காத நிலையான சொத்துக்களின் பெறுமதி சரியாக நிதிக் கூற்றுக்களிற்கு உள்ளடக்கப்பட வேண்டும். | 2016 ஆம் ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட திணைக்களத்தின் கீழ் பதியப்பட்ட ரூபா 36,800,000 கிரயத்திலான மோட்டார் வாகனங்களின் உரிமையாண்மை வாய்வழி அறிவுறுத்தலின் பிரகாரம், திணைக்களத்திற்கு பதியப்பட்டிருக்கவில்லை. அரச கணக்குகள் திணைக்களத்தால் வழங்கப்பட்ட வாய்வழி அறிவுறுத்தல் எஸ்ஐஜீஏஎஸ் ஊடாக அந்த சொத்துக்களின் பெறுமதி நாளது வரையாக்கப்பட்டிருக்கவில்லை. |

உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது. இதன்படி, நிதிநிலமைக் கூற்றில் உள்ளடக்கப்பட்டிருந்த நிலையான சொத்தின் பெறுமதி ரூபா 250,000 ஆல் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்ததுடன் மேற்குறிப்பிட்ட குறைபாடுகள், திணைக்களத்தின் நிலையான சொத்து பெறுமதியின் உண்மைத் தன்மை நியாயமாக திருப்தியடைய முடியாது.

### 1.6.3 காசுப்பாய்ச்சல் கூற்று

| | கணக்காய்வு விடயம் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | கணக்காய்விற்கு கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம், திணைக்களததின் செயற்பாட்டு நடவடிக்கையில் இருந்தான காசுப்பாய்ச்சல் ரூபா 741,520,868 ஆக பதியப்பட்டிருந்தது எவ்வாறாயினும், கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம், திறைசேரி கட்டுநிதியாக ரூபா 580,342,442 ஆன ஏனைய தலைப்புகளிற்காக சேகரிக்கப்பட்ட வருமானமாக ரூபா 10,495,190 உமாக அத்தகையவாறு ரூபா 580,837,630 ஆக இருந்தது. இதன்படி, செயற்பாட்டு நடவடிக்கையிலிருந்து உருவாக்கப்பட்ட காசுப்பாய்ச்சல் ரூபா 150,683,238 ஆக இருந்தது. | 2019 திசெம்பர் 03 ஆந் திகதிய 271/2019 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் பிரகாரம் திருத்திய கட்டுநிதி சீராக்கல் கணக்கு தயாரிக்கப்பட வேண்டும். | காசுப்பாய்ச்ல் கூற்றில் ரூபா 161,341,868 இன் வருமானமற்ற பெறுவனவுகள் காட்டப்பட்டிருந்தது. இது ரூபா 10,495,190 ஆன ஏை9னய தலைப்பிற்காக சேகரிக்கப்பட்ட வருமானங்களை உள்ளடக்கப்படுகின்றதுடன் மாதாந்த கணக்குப் பொழிப்புக்களின் பிரகாரம் இது திருத்தப்பட்டுள்ளது. காசுப் பாய்ச்சல் கூற்றில் ரூபா 150,683,238 ஆல் செயற்பாட்டு நடவடிக்கையில்ருந்து உருவாக்கப்பட்ட காசுப் பாய்ச்சல் அதிகரித்துக் கூற்ப்பட்டிருந்தது என நீங்கள் கூறப்பட்டிருந்த போதலும் இது பின்வருமாறு உள்ளன,<br><br>ரூபா<br>வருமானமற்ற பெறுவனவு 150,846,678<br>ஏனைய தலைப்புகளிற்காக சேகரிக்கப்பட்ட வருமானம் 10,495,190<br>பெறப்பட்ட கட்டுநிதி 580,342,440<br>---------------------<br>741,684,440<br>---------------------<br>இதன்படி, கணக்கில் செயற்பாட்டு நடவடிக்கையிலிருந்து உருவாக்கப்பட்ட காசாக ரூபா 741,520,868 ஆன தொகை காட்டப்பட்டிருந்தது. இதில் ரூபா 163,440 ெராகையான வெளிநாட்டு மானியங்களின கீழ் தொடர்புபட்ட கட்டுநிதி வித்தியாசம் உள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | திணைக்களத்தின் காசுப் பாய்ச்சல் கூற்றில் ஏனைய தலைப்புக்களில் ஆளணி வேதனங்கள் மற்றும் செயற்பாட்டுச் செலவினம் முறையே ரூபா 152,681,456 மற்றும் ரூபா 45,020 ஆன தொகை காட்டப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம், ஏனைய தலைப்புகளில் ஆளணி வேதனங்கள் மற்றும் செயற்பாட்டுச் செலவினங்கள் ரூபா 588,306,843 ஆன தொகை ஏற்பட்டிருந்தது. எனவெ, முறையே ரூபா 435,625,387 மற்றும் ரூபா 47,422,023 ஆன வித்தியாசம் அவதானிக்கப்பட்டது. | -மேற்படி- | திணைக்களத்தின் காசுப் பாயச்சல் கூற்றில் ஆளணி வேதனங்கள் மற்றும் செயற்பாட்டுச் செலவினங்களாக காட்டப்பட்ட ரூபா 152,681,456 ஆன தொகை திருத்தப்பட்டுள்ளது. இது படிவம் ஏசீஏ 2(ii) இன் குறிப்பு 5 மற்றும் 6 இன் பொழிப்பில் உள்ளதுடன் நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் படிவம் ஏசீஏ 2(ii) இல் சரியாக காட்டப்பட்டிருந்தது. |
| (இ) | முதலீட்டு நடவடிக்கையில் இருந்தான காசுப்பாய்ச்சின் கீழ் முற்பண அறவீடுகளாக ரூபா 5,802,907 ஆன தொகை காட்டப்பட்டிருந்தது. கணக்காய்விற்கு கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம் இது ரூபா 5,712,351 ஆக இருந்தது. எனவே, ரூபா 90,556 ஆன வித்தியாசம் அவதானிக்கப்பட்டது. | -மேற்படி- | படிவம் ஏசீஏ 2-5, முற்பண இணக்கக் கூற்று மற்றும் 2019 வரையுமான இறுதிகணக்கு என்பவற்றின் பிரகாரம், ரூபா 5,802,902 ஆகவுள்ள முற்பண அறவீடு திருத்தப்பட்டுள்ளது. |
| (ஈ) | காசுப்பாய்ச்சல் கூற்றின் பிரகாரம், முதலீட்டு நடவடிக்கைகளிற்காக ஏற்பட்ட காசுப்பாய்ச்சலின் கீழ் பௌதீக சொத்துக்கள் கொள்வனவில் எவ்வித செலவினமும் ஏற்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும், மீளாய்வாண்டின் போது தாளபாடங்களில் ரூபா 103,365, தகவல்தொடர்பு உபகரணங்களில் ரூபா 30,200 அலுவலக உபகரணங்களில் ரூபா 5,290 போன்றனவாக பௌதீக சொத்துக்கள் கொள்வனவால் திணைக்களத்தால் ரூபா 138,855 ஆன தொகை ஏற்பட்டிருந்தது. | -மேற்படி- | ஒத்துக் கொள்கிறோம் |

| | | | |
|---|---|---|---|
| (உ) | முதலீட்டு நடவடிக்கைகளிற்காக ஏற்பட்ட காசுப்பாய்ச்சலின் கீழ் முற்பணக் கொடுப்பனவுகளாக ரூபா 7,580,893 ஆன தொகை காட்டப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம், ரூபா 7,592,142 ஆக இருந்ததுடன் ரூபா 11,249 ஆன வித்தியாசம் அவதானிக்கப்பட்டது. | -மேற்படி- | படிவம் ஏசீஏ 5, முற்பண இணக்கக் கூற்று மற்றும் 2019 வரையுமான இறுதிகணக்கு என்பவற்றின் பிரகாரம், ரூபா 7,580,893 ஆன முற்பணக் கொடுப்பனவு திருத்தப்பட்டுள்ளது. |
| (ஊ) | 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக தேறிய அசையும் காசு மீதி காசுப்பாய்ச்சல் கூற்றில் பூச்சியமாக காட்டப்பட வேண்டும். எவ்வாறாயினும், மேற்குறிப்பிட்ட சீராக்கல்களின் வித்தியாசம் காரணமாக, தாகை திணைக்களத்தால் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட சாசுப்பாயச்சல் கூற்றில் தேறிய அசையும் மீதியாக ரூபா 538,835,065 ஆன ெ காட்டப்பட்டிருந்தது. | -மேற்படி- | கருத்து தெரிவிக்கவில்லை. |

### 1.6.4 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை

கணக்காய்வு தெரிவுச் செவ்வையின் போது பின்வரும் பிணை வைப்பு பதிவேடு திணைக்களத்தால் பேணப்பட்டிருக்கவில்லை மற்றும் வாகன சம்பவக் குறிப்பு புத்தகங்களும் நாளதுவரையாக வைத்திருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

| கணக்காய்வு விடயம் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| **(அ) பிணை வைப்பு பதிவேடு** | | |
| வழங்கப்பட்ட பிணைவைப்புக்காக வேண்டப்பட்ட உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களின் தகவல்கள் கொண்டிருக்கின்ற பிணை வைப்பு பதிவேடு பேணப்பட்டிருக்கவல்லை. | நிதிப்பிரமாணம் 891(1) இன் பிரகாரம் மேற்குறிப்பிட்ட தகவல்களை உள்ளடக்கு -பவையாக பிணை வைப்பு வைத்திருப்பதற்கு பொறுப்புடைய நபர்களின் விபரங்கள் பிணைவைப்பு பதிவேட்டில் பேணப்பட வேண்டும். | 2019 மார்ச் 23 ஆந் திகதிய 07/2019 ஆம் இலக்க உள்நாட்டு உள்விவகார நடவடிக்கைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி விவகாரங்கள் அமைச்சு செயலாளரின் சுற்றறிக்கையின் பிரகாரம், அசவியமான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| **(ஆ) சேதங்கள் மற்றும் இழப்புகளின் பதிவேடு** | | |
| திணைககளமானது சேதங்கள் மற்றும் இழப்புக்களின் பதிவேடு பேணப்பட வேண்டிய போதிலும் நாளதுவரையாக இது வைத்திருக்கவில்லை. | சேதங்கள் மற்றும் இழப்புக்களின் பதிவேடு நிதிப்பிரமாணத்தின் 110 ஆம் பிரிவின் பிரகாரம் நாளதுவரை வைத்திருக்க வேண்டும். | சேதங்கள் மற்றும் இழப்புக்களின் பதிவேடு தயாரிக்கப்பட்டிருக்காத போதிலும் இது அண்மைய சேதங்களை பதிவதற்கு தவறியிருந்தது. சம்பந்தப்பட்ட ஆய்வுகள் பூர்த்தியாக்கப்படாமையே காரணமாக உள்ளன. எதிர்காலத்தில் நிதிப் பிரமாணம் 110 இற்கு அமைய நிகழ்கின்ற நட்டங்களை விரைவில் பதிவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| **(இ) வாகன சம்பவ குறிப்பு புத்தகம்** | | |
| ஐந்து (05) வாகனங்கள் சம்பந்தமான சம்பவ குறிப்பு புத்தகங்களின் கணக்காய்வு பரிசோதனையின் போது நுகரப்பட்ட எரிபொருள் தொகை, வருடாந்த அனுமதிப்பத்திரம் மற்றும் மாதாந்த பொழிப்புகள் போன்ற வாகனங்களின் அடிப்படை விபரங்கள் பதிவதற்கு தவறிய சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டது. | வாகனங்களின் சம்பவ குறிப்பு புத்தகங்கள் நாளதுவரையாக பேணப்பட வேண்டும். | வாகனங்களின் சம்பவ குறிப்பு புத்தகங்கத்தில் நுகரப்பட்ட எரிபொருள் தொகை, வருடாந்த அனுமதிப்பத்திரம் மற்றும் மாதாந்த பொழிப்புகள் போன்ற குறைபாடுகளை தவிர்ப்பதற்கு ஏற்கனவே நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. |

## 1.6.5 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை கிழே பகுப்பாய்வு செய்யப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கான தொடர்பு | அவதானிப்பு<br>இணங்காமை | பரிந்துரைகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துகைள் |
|---|---|---|---|
| **(அ) நிதிப்பிரமாணம்** | | | |
| i நிதிப்பிரமாணம் 571(3) | இரண்டு ஆண்டுகளிற்கு மேலாக இருந்த வைப்புக்கள் திரண்ட நிதியத்திற்கு செலவு வைக்கப்பட வேண்டும். ரூபா 20,995,493 கூட்டுத் தொகையான காணிகான விண்ணப்பங்களில மற்றும் | நிதிப்பிரமாணம் 571 இற்கமைய செயற்பட வேண்டும். | மாவட்ட மட்ட உத்தியோகத்தரின் சிபார்சுகளுடன் அடுத்த 2 மாபதங்களிற்குள் பொது வைப்புக் கணக்கில் விடப்பட்ட |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | செயற்திட்ட நிதிகளிலுள்ள வைப்புக்கள் தவிர்ந்த திணைக்களத்தில் பொது வைப்புக்கள் தொடர்பான 37 வைப்புக்கள் இரண்டு ஆண்டுகளிற்கு மேலாக தீர்க்கப்படாமல் அல்லது அரசாங்க வருமானத்திற்கு செலவு வைக்கப்படாமல் இருந்தது. | | செயற்திட்ட நிதிகளை விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் செயற்பாட்டிலுள்ள செயற்திட்டங்களின பிடிகாசு செயற்திட்டம் பூர்த்தியாக்கப்பட்ட பின்னர் அரசாங்க வருமானத்திற்கு செலவு வைக்கப்பட வேண்டும். |
| ii | நிதிப்பிரமாணம் 104 | (i) | திணைக்களத்தின் பாதுக்க மற்றும் நுவரெலியா அலுவலக பொறுப்பதிகாரி ரூபா 203,600 பெறுமதியுடைய கணனி உபகரணங்களின் இழப்பு தொடர்பில் புலனாய்வு அறிக்கை சமர்ப்பிக்கப் பட்டிருந்தது. எவ்வாறாயினும், உரிய அமைச்சு செயலாளர் இந்த அடையாளம் காணப்படாத இழப்பிற்காக பொறுப்புடைய நபருக்காக முறையான விசாரணை நடாத்துவதற்கு பரிந்துரை செய்திருந்தார். எவ்வறாயினும், புலனாய்வகள் 2020 மே 31 வரையும் தொடங்கப் பட்டிருக்கவில்லை. | நட்டங்கள் மற்றும் செதங்கள் தொடர்பில் நிதிப் பிரமாணங்களிற்கு அமைய செயற்பட வேண்டும். | பாதுக்க மற்றும் நுவரெலியா மாவட்ட அலுவலகங்களில் கணனி உபகரணங்கள் இழந்தமை தொடர்பில் தயாரிக்கப்பட்ட புலனாய்வு அறிக்கையை உரிய அமைச்சு செயலாளர் அனுமதிக்கப் பட்டிருக்காமையால் புலனாய்வுகள் நிராகரிக்கப்பட்டது. |
| | | (ii) | அநுராதபுர மாவட்ட பொறுப்பதிகாரி அலுவலகத்தில் 2018 நவம்பர் 18 இல் ஏற்பட்ட விபத்திற்காக இழப்புக்களின் நிர்ணயிப்பு மற்றும் இறுதி அறிக்கை சமர்ப்பித்தல் 2020 மே 31 வரையும் பூர்த்தியாக்கப் பட்டிருக்கவில்லை. | -மேற்படி- | ஆரம்ப விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டிருந்த துடன் ஆய்வு அறிக்கை பெற்திருந்த பொதிலும் சேதங்களின் அறிக்கை இன்னமும் பெறப்பட்டிருக்கவில்லை. |
| | | (iii) | நிதிப்பிரமாணம் 104(ஆ) இன் பிரகாரம் சேதங்ள் மீதான இழப்பகள் இயலக்கூடிய விரைவில் அறவிடப்பட வேண்டும். எவ்வாறாயினும், இழப்புகள் அறவிடப் பட்டிருக்காததுடன் 2020 பெப்ரவரி 07 வரையும் தேசிய சமூதாய நீர் வழங்கல் திணைக்களத்தில் ஓடுவதற்காக பயன்படுத்திய இரண்டு வாகனங்கள் தொடர்பில் 2018 நவம்பர் 10 மற்றும் 2019 ஆகஸ்ட் 18 இல் இடம்பெற்ற விபத்துக்கான பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கவில்லை. | -மேற்படி- | மேற்குறிப்பிட்ட அநுராதபுர மாட்ட அலுவலகத்திற்கு சொந்தமான CA-1691 ஆம் இலக்க வாடகை வாகனம் CAR-5337 ஆம் இலக்க வானம் தொடர்பான அறிக்கை ஏற்கனவே பெறப்பட்டது. எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். |

| | | | |
|---|---|---|---|
| **(ஆ) அரச நிதிச் சற்றறிக்கை** | | | |
| 2016 மார்ச் 31 ஆந் திகதிய 05/2016 ஆம் இலக்க சுறறறிக்கையின் 3.2.3 மற்றும் 3.2.4 ஆம் பிரிவுகள் | முன்னைய ஆண்டிற்கான பௌதீக இருப்பு மெய்மையாய்வு 2020 மார்ச் 31 இற்கு முன்னர் பூர்த்தியாக்கப்பட வேண்டும். எவ்வாறாயினும், 05 மாவட்ட அலுவலகங்கள் தொடர்பான பௌதீக மெய்மையாய்வு 2020 யூன் 10 வரையும் தொடங்கப் பட்டிருக்கவில்லை என வெளிப்பட்டது. | 2016 மார்ச் 31 ஆந் திகதிய அரச நிதிச் சுறறறிக்கைக்கு அமைய செயற்பட வேண்டும. | 2020 மார்ச் 31 ஆம் திகதிக்கு பின்னர் நாட்டில் நிலவிய கொரோனா நோய் தொற்று மற்றும் அலுவலர்கள் வருகை தராமை என்பவற்றால் 2020 மார்ச் 31 இற்கு முன்னர் 25 மாவட்ட அலுவலகங்களில் 05 மாத்திரம் தாமதப் பட்டிருந்ததுடன் தற்போது அந்த ஐந்து மாவட்டங்களில் பௌதீக மெய்மையாய்வு பூர்த்தியாக்கப் பட்டிருந்தது. |
| **(இ) நிதி அமைச்சு சுற்றறிக்கை** | | | |
| நிதி மற்றும் ஊடகத் துறை அமைச்சின் 2017 யூன் 28 ஆந் திகதிய 01/2017 ஆம் இலக்க சொத்து முகாமைத்துவ சுற்றறிக்கையின் 07 ஆம் பிரிவு | நிறுவனத்திற்கு உடமையான சகல சொத்துக்களின் விபரங்களும் அலுவலகத்தின் கட்டுப்பாட்டு பணிப்பாளருக்கு சமர்ப்பிக்க வேண்டும். எவ்வாறாயினும் 2019 மார்ச் 20 வரை இது செய்யப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும், 2020 மே 31 வரையும் இது செய்யப் பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கை யிலுள்ள ஏற்பாடு களுக்கமைய செயற்பட வேண்டும். | 2020 மே 26 ஆந் திகதிய dncws/ac/ 01057 ஆம் இலக்க என்னுடைய கடிதம் மூலம் கட்டுப்பாட்டு பணிப்பாளருக்கு இந்த அறிக்கை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. |
| **(ஈ) பொதுநிர்வாக சுற்றறிக்கை** | | | |
| 2016 திசெம்பர் 29 ஆந் திகதிய பொது நிர்வாக சுற்றறிக்கையின் 3.1 ஆம் பந்தி | திணைக்களத்தால் உடமை யாக்கப்பட்ட வாகனங்கள் தொடர்பாக சம்பவ குறிப்பு புத்தகங்களின் கணக்காய்வு தெரிவு செவ்வையின் போது, சுற்றறிக்கையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எரிபொருள் நுகர்வு பரிசோதிக்கப் பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது. | | |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவின முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரைகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துகைள் |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டின் போது மூலதன செலவினங்களிற்காக பெறப்பட்ட தேறிய ஏற்பாடுகள் ரூபா 1,706 மில்லியனாக இருந்ததுடன் தேறிய செலவினம் ரூபா 435 மில்லியனாக இருந்தது. எனவே, ங்களிற்காக செய்யப்பட்ட ரூபா 3.20 மில்லியன் தொகையான ஏற்பாடுகள் பயன்படுத்தப்படாமல் முழுயையாக சேமிக்கப்பட்டிருந்தது. எனவே, ரூபா 1,270.23 மில்லியன் சேமிக்கப் பட்டிருந்தது. இதன்படி, தேறிய ஏற்பாடுகளின் சேமிப்பு 74 சதவீதமாக இருந்தது. | நிதிப்பிரமாணம் 50 இற்கமை செலவின மதிப்பீடுகள் சரியாக தயாரிக்கப்பட வேண்டும். | கட்டுநிதி விடுவிப்பதற்கு திறைசேரியால் இயலாமையால் மூலதன செலவினங்களிற்கான ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், செயற்திட்டங்களிற்கான உடன்படிக்கையை கைச்சாத்தி ட்டிருந்ததுடன் முழு ஒதுக்கீடுகளிற்கான வேலைகள் பூர்த்தியாக்கப்பட்டிருந்தது. |

### 2.2 செலவின முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரைகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துகைள் |
| --- | --- | --- |
| (அ) மீண்டெழும் மற்றும் மூலதன தன்மையுடைய எட்டு (08) செலவினத் தலைப்புகளின் கீழ் ரூபா 1,000,000 ஆன தேறிய ஏற்பாடுகள் 26 சதவீதம் முதல் 94 சதவீதம் வரையான வீச்சில் இருந்தது. | நிதிப்பிரமாணம் 50 இற்கமை செலவின மதிப்பீடுகள் சரியாக தயாரிக்கப்பட வேண்டும். | கட்டுநிதி விடுவிப்பதற்கு திறைசேரியால் இயலாமையால் மூலதன செலவினங்களிற்கான ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், செயற் திட்டங்களிற்கான உடன்படிக்கையை கைச்சாத்தி ட்டிருந்ததுடன் முழு ஒதுக்கீடுகளிற்கான வேலைகள் பூர்த்தியாக்கப்பட்டிருந்தது. |
| (ஆ) 322-1-1-0-2103 ஆம் இலக்க செலவின தலைப்பில் இயந்திரம் மற்றும் உபகரணங்களின் கீழ் ரூபா 1,600,000 ஆன தேறிய ஏற்பாடு முழுவதும் சேமிக்கப்பட்டிருந்தது. | -மேற்படி- | 2019 ஆம் ஆண்டின் போது மூலதன சொத்துக்களை கௌ்வனவு செய்வதற்காக திறைசேரியால் ஒதுக்கீடுகள் செய்யப்பட்டிருந்த போதிலும் கட்டுநிதி செலுத்தாமையால் ஒடுக்கீடு முழுவதும் சேமிக்கப்பட்டிருந்தது. |

## 2.3 உப கட்டுநிதி வழங்குதலும் தீர்ப்பனவு செய்தலும்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரைகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துகைள் |
|---|---|---|
| நிதிப்பிரமாணங்கள் 371(5) இன் பிரகாரம், வழங்கப்பட்ட உப கட்டுநிதி நோக்கம் நிவைடைந்த பின்னர் 10 நாட்களிற்குள் தீர்க்கப்பட வேண்டும் எவ்வாறாயினும், 2019 பெப்ரவரி முதல் 2019 திசெம்பர் வரையான காலத்தின் பொது 30 சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்ட ரூபா 360,328 கூட்டுத் தொகையான உப கட்டுநிதி உரிய செயற்பாடுகள் முடிவடைந்தும் உடனடியாக தீர்க்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாணம் 371(5) பிரிவுடன் இணங்கி செயற்பட வேண்டும். | சகல உத்தியோகத்தர்களும் பல்வேறு நடவடிக்கைகளிற்காக வழங்கப்பட்ட உப கட்டுநிதியை வேலைகள் பூர்த்தியான பின்னர் உடனடியாக தீர்க்கப்பட வேண்டுமென அறிவித்திருந்தார் |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 திட்டமிடல்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரைகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துகைள் |
|---|---|---|
| 2014 பெப்ரவரி 14 ஆந் திகதி 2014/01 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம், 2019 ஆம் ஆண்டிற்கான செயல் நடவடிக்கை திட்டம் தயாரிக்கப்பட்டிருந்தது.. எவ்வாறாயினும், சுற்றறிக்கையின் 3 ஆம் பிரிவின் பிரகாரம் உள்ளடக்கப்பட வேண்டிய பின்வரும் விடயங்கள் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.<br>(அ) மீளாய்வாண்டிற்கான நாளதுவரையான நிறுவன கட்டமைப்பு, அனுமதிக்கபட்ட மற்றும் இருக்கின்ற பதவியணி விபரங்கள் | சுற்றறிக்கையின் பிரகாரம், வருடாந்த செயல் நடவடிக்கை திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். | செயல் நடவடிக்கை திட்டம் தயாரிப்பதற்காக 2015/10/14 ஆந் திகதி MNPEA/PLN/APG ஆம் இலக்க கடிதம் மூலம் கொள்கைகள் மற்றும் பொருளாதார விவகார அமைச்சு செயலாளரால் வழங்கப்பட்ட அறிவுறுத்தல் மற்றும் 2015/09/20 இல் எடுக்கப்பட்ட அமைச்சரவை தீர்மானம் என்பவற்றிற்கமைய 2019 ஆம் ஆண்டிற்கான வருடாந்த செயல் நடவடிக்கை திட்டம் குறிப்பிடப்பட்ட படிவத்தை பயன்படுத்தி தயாரிக்கப்பட்டு அதன் பிரதியொன்றும் வழங்கப்பட்டிருந்தது.<br><br>2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 2014.'.01 ஆம் இலக்க சுற்றறிக்கை பிரகாரம், வருடாந்த செயல் நடவடிக்கை திட்டம் தயாரிப்பதற்கான படிவம் வழங்கப் பட்டிருக்கவில்லை அத்துடன் அதன் பிரகாரம் வருடாந்த செயல் நடவடிக்கை திட்டத்தில் உள்ளடக்க வேண்டிய அந்த விடயங்கள் மேற்குறிப்பிட்ட திட்டம் உள்ளடக்கப்பட்டிருந்தது. |

| | |
|---|---|
| (ஆ) வருடாந்த நடவடிக்கைகளிற்கான கட்டுநிதி வேண்டுகை திட்டம் (இ) திட்டமிடப்பட்ட பாரிய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களிற்கான வருடாந்த கொள்வனவுத் திட்டம். (ஈ) உள்ளக கணக்காய்வுத் திட்டம் | எவ்வாறாயினும், திணைக்களத்தின் பதிவு செய்யப்பட்ட சமூதாய தண்ணீர் செயற்திட்டங்களின் சகல அபிவிருத்தி தேவைகளிற்கும் ஐந்து ஆண்டு செயல் நடவடிக்கை திட்டம் தயாரிப்பதற்கு அந்த தாமதங்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படுகின்றன. இது அடுத்த 2 மாதங்களிற்குள் அதன் பிரதியை வழங்குவதற்கு சாத்தியமாக உள்ளது. |

### 3.2 கைவிடப்பட்ட செயற்திட்ட்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரைகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துகைள் |
|---|---|---|
| 2000 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டு இறுதி வரை திணைக்களத்தின் கீழ் பதியப்பட்ட 18 மாவட்டங்களில் சமுதாய அடிப்படை அமைப்புக்களால் அமுலாக்கப்பட்ட 324 நீர் வழங்கல் செயற்திட்டங்கள் செயற்படுகின்றன. எவ்வாறாயினும் அவற்றில் மாத்தளை, மாத்தறை, இரத்தினபுரி மற்றும் புத்தளம் மாவட்டங்களில் செயற்பாடற்ற தண்ணீர் செயற்திட்டங்களை மீளச் செயற்படுத்துவதற்கு போதிய அளவீடுகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது. | செயற்பாடற்ற செயற்திட்டங்களை மீளச் செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். . | கிடைத்த வரையறுத்த வளங்களை பயன்படுத்தி மாவட்ட மட்டத்தில் இருக்கின்ற செயற்பாடற்ற நீர் செயற்திட்டங்களை செயற்படுத்துவதற்கு திணைக்களம் செயற்படுகின்றதுடன் குறுகிய ஒரு ஆண்டிற்குள் உடனடியாக நடவடிக்கைகள் எடுப்பதற்கு சாத்தியமற்றிருந்தது. |

### 3.3 செயற்திட்ட அமுலாக்கலிலுள்ள தாமதம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரைகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துகைள் |
|---|---|---|
| (அ) திணைக்கள ஒதுக்கீடுகளினன் கீழ்2018 மற்றும் 2019 ஆண்டுகளில் 160 செயற்திட்டங்கள் தொடங்கப்பட்டது என அவதானிக்கப்பட்டது. ரூபா 59,774,352 ஆன கிரயத்தில் 32 செயற்திட்டங்களின் வேலைகள் மீளாய்வாண்டு இறுதிவரையும் பூர்தியாக்கப்பட்டிருக்கவில்லை. | திட்டமிடப்பட்டவாறு செயற்திட்டங்களை பூர்த்தியாக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | அந்த செயற்திட்டங்களிற்கான ஏற்பாடுகள் 2019 மே மாதத்தில் அனுமதிக்கப்பட்ட பாதீட்டின் பின்னர் அனுமதிக்கப்பட்டிருந்தது. திணைக்களமானது வேண்டப்பட்டவாறு நீர் செயற்திட்டங்களை செயற்படுத்துவதற்கு செயற்படுகின்றதுடன் குறுகிய ஓராண்டு காலப்பகுதிக்குள் உடனடியாக செய்வதற்கு சாத்தியமற்றிருந்தது. |

| | | |
|---|---|---|
| (ஆ) ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் 17 சமூதாய நீர் செயற்திட்டங்களின் நிர்மாண வேலைகள் வீடமைப்பு மற்றும் நிர்மாண அமைச்சின் கீழ் 2017 மற்றும் 2018 இல் தொடங்கியிருந்தன. எவ்வாறாயினும், 05 செயற் திட்டங்களில் ரூபா 142,635,532 ஆன கிரயத்தில் 2018 திசெம்பர் 15 மற்றும் 2019 மார்ச் 31 அளவில் அமுலாக்கபட வேண்டியிருந்தது. ஒரு செயற்திட்டம் மீளாய்வாண்டு இறுதிவரையும் பூர்த்தியாக்கப பட்டிருக்காததுடன் ஏனைய செயற்திட்டங்கள் அவை பூர்த்தியாக்கப்பட்ட போதிலும் தொழில் ஆரம்பிக்கப் பட்டிருக்கவில்லை | திட்டமிட்ட காலப்பகுதிக்குள் செயற்திட்டங்களை பூர்த்தியாக்குவதற்கும் அவற்றினை ஆரம்பிப்பதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். | வீடமைப்பு மற்றும் நிர்மாண அமைச்சின் ஏற்பாடுகளின் கீழ் அமுலாக்கப்படுகின்ற ஒரு செயற்திட்டத்தின் சில நடவடிக்கைகளை தவிர இருக்கின்ற செயற்திட்டங்கள் பூர்த்தியாக்கப்பட்டிருந்தது. |
| (இ) 2019 திசெம்பர் 31 அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்பட்ட மீளாய்வாண்டின் போது 25 மாவட்டங்களில் தேசிய பிராஜ் ஜால அபிமானி செயற்திட்டத்தின் கீழ் அமுலாக்கப்பட்ட ரூபா 1,782,992,419 கிரயத்திலான 123 செயற்திட்டங்களில் ரூபா 16,187,182 கிரயத்திலான 03 செயற்திட்டங்களில் மாத்திரம் மீளாய்வாண்டு இறுதியில் பூர்த்தியாக்கப்பட்டிருந்தது. 16 மாவட்டங்களில் அமுலாக்கப்பட்ட ரூபா 785,058,909 கிரயத்திலான 46 செயற்திட்டங்களின் முன்னேற்றம் 75 சதவீதத்தை விட குறைவாக இருந்தமை அவதானிக்கப்பட்டது. | திட்டமிட்ட காலப்பகுதிக்குள் செயற்திட்டங்களை பூர்த்தியாக்குவதற்கும் அவற்றினை ஆரம்பிப்பதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஒரு ஆண்டின் இறுதி வரைக்கும் செயற்திட்டங்களிற்கான ஒதுக்கீடாக 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செயற்திட்டங்களை பூர்த்தியாக்குவதற்கு பட்டியலிடப்பட்டது.<br><br>எவ்வாறாயினும், செயற்திட்ட அமுலாக்கலின் நடைமுறைச் சாத்தியம் பாதகமான காலநிலை மற்றும் நிதிகள் இன்மை காரணமாக தாமதப்பட்டிருந்தது. அந்த சகல செயற்திட்டங்களும் இந்த ஆண்டின் அடுத்த இரண்டு மாதத்திற்குள் பூர்த்தியாக்குவதற்கு பட்டியலிடப்பட்டன. |

### 3.4 வருடாந்த செயலாற்றல் அறிக்கை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரைகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துகைள் |
|---|---|---|
| 2002 செப்தெம்பர் 12 இன் 402 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான செயலாற்றல் அறிக்கை நிதியாண்டு முடிவடைந்து 150 நாட்களிற்குள் திணைக்களத்தால் சமர்ப்பிக்கப்பட வேண்டும். 2015 முதல் 2019 ஆம் ஆண்டுகளிற்கான வருடாந்த செயலாற்றல் அறிக்கை 2020 மே 31 வரையும் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்பட வேண்டும். | 2015, 2016, 2017, 2018 ஆம் ஆண்டுகளிற்கான செயலாற்றல் அறிக்கை தயாரிக்கப்பட்டிருந்தது. அடுத்த 03 மாதங்களிற்குள் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிப்பதற்கு ஒழுங்குகள் செய்யப்படும். |

## 3.5 கொள்வனவுகள்

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்பகள் மேற்கொள்ளப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரைகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துகைள் |
|---|---|---|---|
| (அ) | தேசிய கொள்வனவு முகவராண்மையின் அரசாங்க கொள்வனவு வழிகாட்டலின் 4.2.1(அ) மற்றும் (ஆ) பந்திகளின் பிரகாரம், அடுத்துவரும் மூன்று (03) ஆண்டுகளிற்காக எதிர்பாரக்கப்பட்ட கெள்வனவுகள் உள்ளடங்கலான பிரதான கொள்வனவு திட்டம் திணைக்களத்தால் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | தேசிய கொள்வனவு முகவராண்மையின் கொள்வனவு வழிகாட்டலின் ஏற்பாடுகளுடன் இணங்க வேண்டும். | 2019 ஆம் ஆண்டிற்கான கொள்வனவு திட்டம் வருடாந்தம் பெறப்பட்ட ஒதுக்கீட்டுத் தொகை அடிப்படையில் தயாரிக்கப்பட்டிருந்தது. எதிர்காலத்தில் அடுத்துவரும் மூன்று (03) ஆண்டுகளை மேவி கொள்வனவு திட்டம் தயாரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி திட்டத்தின் கீழ் அமுலாக்கப்படுகின்ற வெவிகம புகுடுவ செயற்திட்டத்திற்காக பெறப்பட்ட நிதிகளில் திகைகளத்தின் குருநாகல், அநுராதபுரம், வவுனியா மாவட்ட அலுவலகங்கள் மற்றும் தலைமை அலுவலம் என்பவற்றிற்காக வாடகை அடிப்படையில் 04 கப் வாகனங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், அந்த வாகனங்களை வழங்குவதற்காக தெரிவு செய்யப்பட்ட கேள்வியாளர்கள் உடன்பட்ட 04 வாகனங்களிற்கு பதிலாக இன்னொரு 04 வாகனங்கள் கொள்வனவு குழுவின் அல்லது தொழில்நுட்ப மதிப்பாய்வு குழுவின் அனுமதியை பெறுவதற்கு முன்னர் செயற்பாட்டிற்குள் உள்வாங்கப்பட்டதுடன் அதற்காக உடன்படிக்கையும் கைசாத்திடப்பட்டிருந்தன. மேலும், ஆகஸ்ட் மற்றும் செப்தெம்பர் மாதங்களின் போது கடமைகளிற்காக ஈடுபடுத்தப்பட்ட 03 வாகனங்களிற்காக 2020 | கொள்வனவின் போது கொள்வனவு வழிகாட்டல் நடைமுறையிலுள்ள ஏற்பாடுகள் பின்பற்றப்பட வேண்டும். | கொள்வனவு நடைமுறையின் பிரகாரம் வாகனங்கள் கொள்வனவு செய்வதற்குப் பதிலாக ஒரே விதப்புரைகளுடன் இன்னொரு வாகனம் வழங்குவதற்கு சாத்தியம் உள்ளது என கவனத்திற் கொள்ளப்பட்டது. இதன்படி, இன்னொரு 04 வாகனங்கள் தெரிவுசெய்யப்பட்ட வாகனங்களின் விதப்புரைகளிற்கு அமைய வேலைகளிற்காக பயன் படுத்தப்பட்டதுடன் கொடுப்பனவுகள் செய்யப்பட முன்னர் தொழில்நுட்ப மதிப்பாய்வு குழுவின் சிபார்சு மற்றும் கொள்வனவு குழுவின் அனுமதி பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. |

| | | | |
|---|---|---|---|
| | பெப்ரவரி 28 இல் ஒப்பந்தகாரருக்கு ரூபா 1,200,603 ஆன தொகை செலுத்தப்பட்டிருந்தது. மேலும், உடன்படிக்கை கைச்சாத்திடப்படுகின்ற நேரத்தில் குருநாகல் மாவட்ட அலுவலகத்திற்காக கொள்வனவு செய்யப்பட்ட வாகனங்களின் உரிமையாண்மையை வழங்குநர் கொண்டிருக்கவில்லை. | | |
| (இ) | ஒரே தடவையில் திணைக்களத்தின் சகல மாவட்டங்களிலும் அமுலாக்கப்படுகின்ற சமூதாய நீர் வழங்கல் செயற்திட்டங்களிற்காக தேவைப்பட்ட பிளசீ குழாய்கள் மற்றும் பொருத்திகள், பம்புகள், ஜீஐ குழாய்கள் போன்ற பிரதான பொருட்களின் தேவைகளை இனங்காணாமை மற்றும் அந்த மொத்த தேவைக்குமான ஒரு ஒப்பந்தம் வழங்கல், காலரீதியான விளம்பரம் காலத்திற்கு காலம் வெளியிடுவதன் மூலம் பொருட்களை கொள்வனவு செய்வதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், கொள்வனவு வழிகாட்டலின் 4.4 ஆம் பநதியின் ஏற்பாடுகளின் பிரகாரம், கொள்வனவு குழு அல்லது அமைச்சு செயலாளர் முன்னனுமதி பெறப்பட்டிருக்கவில்லை. மேலும், அதே பொருளின் கொள்வனவிற்காக வழங்கப்பட்ட தனியான ஒப்பந்தங்கள் பல கொள்வனவு குழுவில் மதிப்பாய்வு செய்யப்பட்டதுடன் குழு உறுப்பினர்களிற்காக புறம்பான படிகளும் செலுத்தப்பட்டிருந்தது. | திணைக்களத்தின் பிளசீ குழாய்கள் மற்றும் பொருத்திகளின் ஒட்டு மொத்த தேவைகள் ஆரம்பத்தில் திட்டமிடப்பட வேண்டும் மற்றும் கொள்வனவு இதன்படி அதிக வினைத்திறன் மற்றும் ஆக்கபூர்வமாக செய்யப்பட வேண்டும். | கொள்வனவு செய்யப்படுகின்ற பிவீசி மற்றும் உபபாகங்களின் மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 530 மில்லியனானதுடன் திணைக்கள அமைச்சரவையால் நியமிக்கப்பட்ட கொள்வனவு குழுவால் செய்யப்பட வேண்டியிருந்ததுடன் ஒரு விளம்பரம் ஊடாக கேள்விகள் கோரப்படுமாயின் அமைச்சின் கொள்வனவு எல்லைகள் விஞ்சியிருந்தது. இந்த வெலை இதனைவிட நீண்ட காலத்தை எடுக்கும்.<br><br>மேலே விளக்கப்பட்டவாறு அதிகளவு வினைத்திறன், ஆக்கபூர்வம் மற்றும் இலாபத் தன்மையுடன் புறம்பான ஒப்பந்தம் வழங்குதலாக உள்ளது. கொள்வனவு கைநூலின் 32 ஆம் குறைநிரப்பின் பிரகாரம், கொள்வனவு குழு மற்றும் தொழில்நுட்ப மதிப்பாய்வு குழுவின் கொடுப்பனவகள் ஒவ்வொரு ஒப்பந்தத்தின் பெறுமதியின் அடிப்படையில் செய்யப்பட்டன. ஆகவே, கொள்வனவு கைநூலின் 2.9.1 ஆம் பந்தியின் பிரகாரம் மேலதிக கொடுப்பனவுகள் எதுவும் செய்யப்படவில்லை. திணைக்களத்தின் 22 நிர்மாண கைத்தொழில்களிற்கான கொடுப்பனவு இதே போல 2017 ஆம் ஆண்டின் போது செய்யப்பட்டிருந்தது. |

## 3.6 சொத்துகள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்பகள் மேற்கொள்ளப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரைகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துகைள் |
|---|---|---|
| **பயன்படுத்தப்படாத வாகனங்கள்** | | |
| (அ) திணைக்களத்திற்கு சொந்தமான மூன்று (03) வாகனங்கள் ஓடாமல் திணைக்கள வளவில் தரித்துவிடப்பட்டிருந்தது என 2020 சனவரி 03 மற்றும் 28 இல் நடாத்தப்பட்ட பௌதீக பௌதீக மெய்மையாய்வில் வெளிப்பட்டது. | திருத்தம் செய்வதற்கு சாத்தியமற்றிருக்குமாய ின் வாகனத்தை ஏல விற்பனை செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | இல. cab-57-0015 தொடர்பில் மோட்டார் வாகன தொழில்நுட்பவியலாளர் இந்த வாகனம் திருத்த முடியாதுள்ளது என அபிப்பிராயம் தெரிவித்திருந்ததுடன் 2019 ஆம் ஆண்டிற்கான மோட்டார் வாகன காப்புறுதிச் சான்றிதழை பெறுவதற்கு மோட்டார் வாகன பெறுமதியை மதிப்பிடுவதற்கு சபை நியமித்த உறுப்பினராக இருந்த மோட்டார் வாகன திணைக்களத்தின் பரிசோதகர் இது ஏலவிற்பனைக்கு விடுவதற்கு அறிவுறுத்தியிருந்தார்.<br><br>இல் WP-GB-0066 ஆம் இலக்க கப் வாகனத்தின் திருத்த வேலைகள் திருத்தங்களிற்காக ஒதுக்கப்பட்ட நிதிகள் போதாமையால் பூர்த்தியாக்க முடியவில்லை.<br><br>இல் WP-GB-2233 ஆம் இலக்க கப் வாகனத்தின் திருத்த வேலைகள் நிதி ஏற்பாடுகள் போதாமையால் தாமதப்பட்டிருந்துடன் இந்த திருத்த வேலைகளை செய்வதற்கு நான்கு இலட்சம் ரூபா தேவைப்படும் எனவும் மோட்டார் வாகன தொழில்நுட்ப உத்தியோகத்தர் தீர்மானித்திருந்தார். |
| **(ஆ) வேறு அரசாங்க நிறுவனங்களிற்கு சொந்தமான வாகனங்களின் பயன்பாடு** | | |
| தேசிய சமுதாய மற்றும் நீர் வழங்கல் திணைக்களத்தால் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம், மீளாய்வாண்டின் போது வீடமைப்பு மற்றும் நிர்மாண அமைச்சின் சமுதாய நீர் வழங்கல் மற்றும் சுகாதார செயற்திட்டத்தின் பத்து (10) வாகனங்கள் உள்ளடங்கலாக வேறு நிறுவனங்களிற்கு சொந்தமான பதினேழு (17) வாகனங்கள் பயன்படுத்தப்பட்டிருந்தது. | முறைப்படி அந்த வாகனங்களை கையேற்பதற்கோ அல்லது உரிய நிறுவனங்களிற்கு அவற்றினை விடுவிப்பதற்கோ நடவடிக்கை எடுக்க வேண்டும் | திணைக்களத்திற்கு அவை கையேற்பதற்கு அவசியமான ஒழுங்குகள் செய்யப்பட்டிருந்ததுடன் 13 வாகனங்கள் கையேற்பதற்கு வாகனங்கள் பதிவுசெய்யப்பட்ட நபர்கள் அவர்களுடைய அனுமதியை ஏற்கனவே வழங்கியிருந்தது. தற்போது பதிவுசெய்யப்பட்ட நிறுவனத்தால் அனுமதி வழங்கப்பட்டிருந்ததுடன் மாற்றுவதற்கான அனுமதி பெறுவதிலுள்ள தாமதத்தால் தாமதமடைந்திருந்தது. எவ்வாறாயினும் மோட்டார் போக்குவரத்து ஆணையாளரிற்கு முன்னளிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. |

| | | |
|---|---|---|
| | | அறிக்கையில் குறிப்பிடப்பட்ட இருக்கின்ற 04 வாகனஙிகளின் கொள்வனவு செயற்பாட்டில் உள்ளதுடன் எதிர்காலத்தில் அவற்றின் உரிமையாண்மையை மெய்மையாய்வு செய்யும் சாத்தியம் உள்ளது. |

(c) **குறைவாக பயன்படுத்திய திணைக்களச் சொத்துக்கள்**

| | | |
|---|---|---|
| 2019 ஆம் ஆண்டின் போது தலைமை அலுவலகத்தில் ஈடுபடுத்தப்பட்ட வாகன அணியில் 03 வாகனங்கள் மீளாய்வாண்டின் 08 மாதங்களின் போது 500 கிலோமீற்றரை விட குறைவாக ஓடியிருந்த அதேநேரம் வாடகைக்கு அமர்த்தப்பட்ட இரண்டு வாகனங்கள் தலைமை அலுவலகத்தில் கடமைகளிற்காக பயப்படுத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், மீளாய்வாண்டின் போது அந்த வாடகைக்கு அமர்த்தப்பட்ட வாகனங்கள் உடன்பட்ட தூரத்தை விட குறைவான தூரத்தையே ஓடியிருந்தது. | திணைக்களத்தால் உடமையாக்கப்பட்ட வாகனங்களை முழுமையாக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | இந்த திணைக்களம் நீர்ப்பாசன மற்றும் மகாவலி அமைச்சின் கீழ் புத்தளம், குருநாகல், அநுராதபுரம், வவுனியா, திருகோணமலை மற்றும் மன்னார் மாவட்டங்களில் வெவ்கம புகுடுவ செயற்திட்டத்தின் கீழ் அபிவிருத்தி செயற்திட்டங்களின் எண்ணிக்கைக்கு ஒரு பகுதியாக ஈடுபடுத்தப்பட்டுள்ளது. செயற்திட்டங்களில் கடமையில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்களிற்கு தேவைப்பட்ட போக்குவரத்து வசதிகள் வழங்குவதற்கு வாடகை அடிப்படையில் அமர்த்தப்பட்ட வாகனங்களிற்கு செயற்திட்டத்தின் கீழ் நிதிகள் ஒதுக்கப்பட்டிருந்ததுடன் பிரயாணம் செய்த தூரம் செயற்திட்டம் உடன்பட்டதிலிருந்து குறைவாக இருந்த போதிலும் நிலைமை தற்போது மாற்றப்பட்டது. தற்போது செயற்திட்டத்தை கண்காணிப்பதற்கு தலைமை அலுவலக கடமைகளிற்கு வாகனங்கள் மாத்திரம் வழங்கப்பட்டிருந்ததுடன் உடன்பட்ட தூரமும் பன்படுத்தப்படுகின்றன. |

**3.7 அரச உத்தியோகத்தர்களின் பிணைவைப்பு**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரைகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துகைள் |
|---|---|---|
| இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப்பிரமாணத்தின் 128(1(n) ஆம் பிரிவின் பிரகாரம் பொருத்தமான நீதிப்பிரமாணம் மற்றும் சட்டங்களிற்கு அமைய பிணை வைப்புக்களை வைக்க வேண்டிய உத்தியோகத்தர்கள் பிணை வைப்பினை செய்ய வேண்டும். எவ்வாறாயினும் திணக்களத்தின் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்கள் அவ்வாறு செய்யப்பட்டிருக்காததுடன | நிதிப்பிரமாணங்களிற்கு அமைய செயற்பட வேண்டும். | 2019 மார்ச் 23 ஆந் திகதிய 07/2019 ஆம் இலக்க உள்நாட்டு, உள்விவகார, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு செயலாளரின் சுற்றறிக்கைக்கு அமைய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

நிதிப்பிரமாணம் 891(1) ஆம் பிரிவின் பிரகாரம் பிணை வைப்பு பதிவேடு நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை.

## 4. நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைதல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரைகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துகைள் |
|---|---|---|
| ''சகலருக்குமான தண்ணீர் நிலைபேறான முகாமைத்தவம் மற்றும் சுகாதார பெறுகைகளை உறுதிபடுத்தல்'' என்பன தேசிய சமூதாய மற்றும் நீர்வழங்கல் திணைக்களத்தின் நிலைபேறான இலக்குகளாக இனங்காணப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், எந்தவொரு உள்ளக சுற்றறிகைகள், வழிகாட்டல்கள் மற்றும் செயலமர்வுகள் என்பன திணைக்களத்தால் நடாத்தப்பட்டிருக்கவில்லை. | திணைக்கள நிலைபேறான இலக்குகளை அடையும் இலக்கை நோக்கி திணைக்களம் வேலை செய்ய வேண்டும் | சகல நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களிற்காகவும் பாதுகாப்பான தண்ணீர் மற்றும் சுகாதார வசதிகள் ஏற்பாட்டின் கீழ் உரிய நோக்கங்களை தாபித்தல், உரிமையாளர்களின் பங்களிப்பு வழங்குதல் நீர் வழங்கல் அமைச்சால் கையேுற்க்கப்பட்டிருந்தது. எனவே, திணைக்கள உத்தியோகத்தர்கள் அமைச்சால் ஒழுங்கு செய்யப்பட்ட கூட்டங்கள் மற்றும் செயலமர்வில் பங்குபற்றியிருந்தனர். |

## 5. மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரைகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துகைள் |
|---|---|---|
| திணைக்களத்தின் செயற்பாடுகளை ஒன்றிணைக்கும் நோக்கில் மீளாய்வாண்டின் போது ஆளணி வேதனங்களிற்காக ரூபா 117.51 மில்லியன் தொகை ஏற்பட்டிருந்தது.<br><br>இதன்படி, ஒரு நபருக்குரிய செலவினம் ரூபா 529,326 ஆக இருந்தது. 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஒவ்வொரு ஊழியர்களின் வகுதியின் கீழ் அனுமதிக்கப்பட்ட ஊழியரின் எண்ணிகையின் 30 சதவீதம் முதல் 100 சதவீதம் வரையான வீச்சில் வெற்றிடங்களின் சதவீதம் அவதானிக்கப்பட்டது. | அத்தியாவசியமான பதவிகளிலுள்ள வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | திணைக்கள பதவிகளிற்கு ஆட்சேர்பதற்காக அனுமதி கொரப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், அந்த பதவிகளை நிரப்புவதற்கு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திடமிருந்து அனுமதி பெறப்பட்டிருந்தது.<br><br>எவ்வாறாயினும், 2019 ஆம் ஆண்டில் நிலவிய வெற்றிடங்களில் 06 வெற்றிடங்களை நிரப்புவதற்கு இயலாதிருந்ததுடன் 124 பயிற்சிப் பட்டதாரிகளை சேர்ப்பதன் மூலம் அந்த வெற்றிடங்களை தவிர்ப்பதற்கு படிமுறைகள் எடுக்கப்பட்டிருந்தது. |